செய்தி வெளியீடு : 703 நாள் – 10.10.2009

## தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியத்தின் இரண்டாவது கூட்டம். – நாள்:- 10.10.2009.

தமிழக அரசு அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றியது. இச்சட்டத்தில் அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை உருவாக்கவும் அவற்றை செயல்படுத்துவதற்கென நல வாரியத்தை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டு 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் கலைஞர்கள், கைவினைத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல்பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், ஓவியர்கள், பொற்கொல்லர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், வீட்டுப்பணியாளர்கள், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கென தனித்தனியாக நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டது. தற்போது கடைசியாக 2009 ஆம் ஆண்டு விசைத்தறி தொழிலாளர்களுக்கும் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இதுவரை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1982–ன் கீழ் 15 வகை தொழிலாளர்களுக்கு தனித்தனியாக நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியங்களில் பதிவு செய்யும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு உருவாக்கி மிக சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

<u>வாரியத்தால் பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி விவரங்கள்</u>

| . எண் | உதவி விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விபத்து நஷ்ட ஈட்டுத் தொகை<br>அ. விபத்து இறப்பு<br>ஆ. விபத்து ஊனம் | ரூ.<br>1,00,000/–<br>ஊனத்தின் தன்மைக்கேற்ப |
| 2. | இயற்கை மரண உதவி | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவி | 2,000/– |

| | | |
|---|---|---|
| | கல்வி உதவித் தொகை<br>அ) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்)<br>ஆ) 10ம் வகுப்பு தேர்ச்சி<br>இ) 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்)<br>ஈ) 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்)<br>உ) 12ம் வகுப்பு தேர்ச்சி<br>ஊ) முறையான பட்டப் படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்<br>எ) முறையான பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்<br>ஏ) தொழில்நுட்பப் பட்ட படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்<br>ஐ) தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்<br>ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால் | <br>1,000/–<br>1,000/–<br>1,000/–<br>1,500/–<br>1,500/–<br>1,500/–<br>1,750/–<br>2,000/–<br>3,000/–<br>2,000/–<br>4,000/–<br>4,000/–<br>6,000/–<br>1,000/–<br>1,200/– |

மேற்படி தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் 15 நல வாரியங்களில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம் தவிர பிற வாரியங்களில் மேற்படி நல திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு தேவையான நிதியை வழங்கி வருகிறது. டாக்டர் கலைஞர் தலைமையிலான இந்த புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற 13.5.2006 முதல் 30.09.2009 வரை இந்நல திட்டங்களை செயல்படுத்த 114 கோடி ரூபாய் தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியங்களில் இதுவரை 2194291 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 30.9.2009 வரை 1429690 தொழிலாளர்கள் பல்வேறு நல வாரியங்களின் கீழ் பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 30.09.2009 வரை பல்வேறு நல திட்டங்களின் கீழ் 514521 தொழிலாளர்கள் ரூ.114,98,09,028 அளவில் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியத்தைப் பொறுத்தவரை 13.5.06 முதல் 30.9.2009 வரை 108671 தொழிலாளர்கள் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். மேற்படி காலத்தில் 61683 தொழிலாளர்கள் ரூ.12 கோடி அளவில் நல திட்டங்களின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

இன்று 10.10.2009 நடைபெற்ற தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியத்தின் இரண்டாவது கூட்டம் மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்துறி, கைத்திறன் மற்றும் கதர்த்துறை அரசு செயலர் திரு R. ராஜகோபால், இ.ஆ,ப., தொழிலாளர் ஆணையர் திரு அ. சுகுமாரன், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணி நுல் துறை மற்றும் கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு வெ. சந்திரசேகரன், இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர் கருப்பசாமி, கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரிய செயலாளர்(பொறுப்பு) திரு எம். ரவிச்சந்திரன், நிர்வாக அலுவலர் திரு எம். பாஸ்கரன், வேலையளிப்போர் பிரதிநிதிகள் திரு டி. கோபிநாதன், திரு ஆர்.கோவிந்தராஜன், திரு கே. பார்த்தசாரதி, திரு பி.எஸ். நாகராஜன், திரு வி. கந்தசாமி, தொழிலாளர் பிரதிநிதிகள் திரு பரமாத்தி சண்முகம், திரு எஸ்.டி. தேவராசன், திரு எஸ்.பி. ராதா, திரு கோபால் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துதல், உறுப்பினர் சேர்க்கை விரைவுபடுத்துதல் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் விரைந்து வழங்குதல் போன்ற பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டன.

**************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9